**O.S.No. 20/2022**

வா.சா.1, திருமதி.விஜயா
நாள் : 21.07.2025 நேரம் : 03.10 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு தாவா சொத்தில் கடை வைப்பதற்காக அனுமதியை அரசு அதிகாரிகள் வழங்கியுள்ளார்கள் என கூறியுள்ளேன் என்றாலும், மேற்படி அனுமதியை எனக்கு எந்த அதிகாரி வழங்கினார் என்ற விவரத்தை என்னால் தற்போது சொல்ல முடியுமா என்றால் எந்த அதிகாரி என குறிப்பிட்டு கூற தெரியாது. நான் எனது கடையை ரோட்டில் அமைத்துள்ளேன் என்றால் சரிதான். நெடுஞ்சாலைதுறை அதிகாரிகளை அழைத்து விசாரித்தால் யார் எனக்கு கடை அமைக்க அதிகாரம் அளித்தார்கள் என தெரியும் என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் அமைத்துள்ள கடையில் இருந்து மேற்குபுறமும், கிழக்குபுறமும் தட்டி மற்றும் Asbetos sheet வைத்து அடைத்துள்ளேன் என்றால் சரிதான். எனது கடைக்கு பின்னால் உள்ள இரு வயல்களுக்கும் என் கடை வழியாக தான் செல்ல முடியும் என்றால் சரிதான். அந்த வயல்கள் என்னுடையது தான். மேற்படி இரு வயல்களையும் டிராக்டர் வைத்து தான் உழ முடியும் என்றால் சரிதான். மேற்படி நான் கூறியது போல கடையின் இரு புறத்திலும் நான் தட்டி மற்றும் Asbetos sheet வைத்து அடைத்துள்ளதால் வாகனங்கள் எதுவும் வயலுக்குள் செல்ல முடியாது என்றால் சரிதான். தற்போது கடையை நான் அடைத்து வைத்துள்ளேன் என்றால் சரிதான், எனக்கு உடல் நலம் சரியில்லாததால் தான் அடைத்து வைத்துள்ளேன். எனது நோக்கம் கடை நடத்த வேண்டும் என்பது இல்லை என்றாலும், கடைக்கு பின்னால் இருக்கும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட வயல்களை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கடையை அமைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் கடை அமைத்ததன் பேரில் பிரதிவாதி என்மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான். அரசு மதுபானைக்கடை நான் அமைத்துள்ள கடையிலிருந்து சுமார்

100 அடி தொலைவில் இருக்குமா என்றால் 100 அடிக்கு மேல் இருக்கும். எனது கடைக்கு மேற்கு பக்கம் 50 அடி தூரத்தில் வள்ளி என்பவர் கடை அமைத்துள்ளார் என்றால் சரிதான். கூரி கிராமத்திற்கும் எனது கடைக்கும் சுமார் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். எனது கடையில் மது அருந்துவதற்கு தேவையான தண்ணீர் பாட்டில், பிளாஸ்டிக் கப், பீடி, சிகிரெட் அவர்கள் பயன்படுத்தக்கூடிய உணவு பொருள்கள் ஆகியவற்றை மட்டும் தான் நான் விற்பனை செய்கிறேன் என்றால் அது மட்டுமல்ல பிஸ்கட் போன்ற வேறு பொருள்களும் விற்பனை செய்கிறோம். மளிகை பொருள்கள் என் கடையில் விற்பனை செய்யவில்லை என்றால் சரிதான். டீ விற்பனை செய்கிறேன். நான் மது கடையின் அருகில் கடை நடத்திவருவதால் எனது கடைக்கு பின்புறம் உள்ள வயலில் மது அருந்துவார்கள் என்றால் சரியல்ல. அரசு மதுபானக்கடைகள் மூடப்பட்டிருக்கும் சமயத்தில் எனது கடையில் மதுபானம் விற்பனை செய்யப்படும் என்றால் சரியல்ல. சட்டவிரோதமாக நான் மது விற்பனை செய்ததால் பிரதிவாதி என்மீது உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அது பற்றி செய்தித்தாளில் வெளி வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கடைக்கு பின்னால் உள்ள வயல் எனக்கு பாத்தியமானது என நான் கூறிவிட்டு மேற்படி வயலில் கடை அமைக்காமல் சாலையின் ஓரத்தில் ஏன் கடை அமைத்தேன் என்றால் இது வரை யாருக்கும் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை. மேற்படி எனது கடைக்கு பின்னால் உள்ள வயல் எனக்கு பாத்தியமானது என்பதை காட்டுவதற்கு என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் கடைக்கு பின்னால் உள்ள வயல்கள் பிரதிவாதியின் தாயார் பெயரில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, எனது சிறு வயதிலிருந்தே எனது தாத்தாவும், பாட்டியும் கிரையம் பெற்ற வயல். மேற்படி கிரைய ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி எனது கடைக்கு

பின்னால் உள்ள இரு வயல்களும் பிரதிவாதியின் தாயாருக்கு அவரது மாமா இனாம் செட்டில்மென்ட் எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் பிரதிவாதியின் தாயாரிடமிருந்து மேற்படி சொத்துகளை எனது தந்தையும், தாயாரும் பெற்றுள்ளார்கள். பிரதிவாதியின் தாயார் 2021ம் ஆண்டு மேற்படி இரு வயல்களையும் பிரதிவாதிக்கு இனாம் செட்டில்மென்ட் எழுதி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இரு வயல்களுக்கும் சம்மந்தமான பட்டா, சிட்டா, அடங்கல், பத்திரம் அனைத்தும் பிரதிவாதியின் தாயாரின் இருந்து வந்தது என்றாலும் , தற்போது பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் தாயாரிடமிருந்து எனது தாத்தா, பாட்டி மேற்படி வயல்களை வாங்கியதற்கான கிரைய பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி பிரதிவாதியின் தாயாரான ஆயிஷா பீவியிடம் நான் மேற்படி இரு வயல்களையும் கிரையம் கேட்டேன் என்றாலும், அவர் எனக்கு கிரையம் கொடுக்காமல் அவரது மகனான பிரதிவாதிக்கு இனாம் செட்டில் மென்ட் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பத்திரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றாலும், எனக்கு தெரியாது என்று வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வயல்களுக்கு தாத்தாவின் பெயரில் போலியான ஆவணங்கள் உற்பத்தி செய்து சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கில் நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மேற்படி வயல்கள் எனக்கு பாத்தியமானது என சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கில் இனாம் செட்டில்மென்ட் எண். 2062/1969 மற்றும் 849/2021 ஆவணங்கள் செல்லத்தக்கது அல்ல என பரிகாரங்கள் கோரியுள்ளேன் என்றால் சரிதான். நான் கடை அமைத்துள்ள இடத்தை ஆணையர் மூலம் அளக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆணையர் கடையை அளக்க வந்த போது நான் அளக்க விடாமல் தடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அவர்கள் வந்து பார்த்துவிட்டு சென்றனர். நான் தடுத்ததாக சொல்லி போலிசார் உதவி

வேண்டும் என ஆணையர் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆணையர் மனுவை வாபஸ் பெற்று கொண்டேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்து அளந்தால் எனக்கு பாதகமாக தீர்ப்பு ஏற்படும் என்பதால் தான் அளக்க அனுமதிக்கவில்லை மற்றும் அந்த ஆணையர் மனுவை வாபஸ் பெற்றேன் என்றாலும் சரியல்ல, நான் யாரையும் அளக்க விடாமல் செய்யவில்லை. பிரதிவாதி சென்னையில் உள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி வெளியூரில் இருப்பதை பயன்படுத்தி நான் அவரது சொத்தான சர்வே எண். 125/3ஏ2 மற்றும் 125/3பி யில் கண்ட அனுபவத்தை தடையிடர் செய்வதற்காக நான் சாலையோரத்தில் கடையையும், வேலியையும் அமைத்து தொடர்ந்து தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது பிராதில் நான் நெல் விவசாயம் செய்துள்ளேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் பருத்தி விவசாயம் தான் செய்கிறேன். சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் 1வது பரிகாரத்தில் நெல் விவசாயம் செய்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி விவசாயம் செய்வதற்கு பயிர் காப்பீடு செய்துள்ளேனா என்றால் செய்திருப்பேன். நான் மேற்படி விவசாயம் செய்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்துகள் எனக்கோ, எனது முன்னோர்கோ பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி மேற்படி சொத்துகளிலிருந்து சாலையை அடைவதற்கான உரிமையை நான் தடுக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி 2 சொத்தின் அருகில் சாலையில் கடை அமைத்து, வேலி அமைத்து பிரதிவாதிக்கு இடையூறு செய்து எவ்வாரேனும் மேற்படி சொத்துகளை அடைந்துவிடலாம் என்ற விருப்பத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது சொத்திலிருந்து சாலையை அடைவதற்கு இடையூறை ஏற்படுத்திவிட்டு இந்த வழக்கை போலியான ஆவணங்களை வைத்து உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதிக்கு பாத்தியமான இரு வயல்களையும் எனக்கு பிரதிவாதி கிரையம்

கொடுத்துவிட்டால் நான் தாக்கல் செய்துள்ள அனைத்து வழக்குகளையும் வாபஸ் பெற்றுவிடுவேன் என்றால் மேற்படி வயல்களை எனக்கு சொந்தமானவை. அதை ஏன் நான் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற வேண்டும். பிரதிவாதிக்கு பாத்தியமான மேற்படி இரு வயல்களுக்கும் நான் சாலையில் கடை அமைத்திருப்பதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி மேற்படி வயல்களிலிருந்து சாலைக்கு வர கடையில் மற்றும் வேலி அமைந்துள்ள பகுதியை தவிர்த்து வேறு வழி இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியை மேற்படி இரு வயல்களையும் நெல் விவசாயம் செய்து பயிர் காப்பீடு செய்தும் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது வயலிருந்து சாலைக்கு வர ஏதுவாக எனது கடையை அப்புறப்படுத்துவது எனது கடமை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கடை அமைக்க எனக்கு எந்த அதிகாரமோ, உரிமையோ இல்லை என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 04.05 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.07.21 16:59:06 +0530